Oasis Grace
Engineering Projects Pvt Ltd
Build Your Future With Us
RTN.DR.R.SATHYANARAYANAN,
Director - Business Development
+91 9360136897 /
+91 8148231942
No.15, North Mada Street, Srinagar Colony, Saidapet, Chennai-600015
www.oasisgrace.in |
business@jmrgroup.org

தமிழ் குரல் மக்கள்
தினசரி காலை நாளிதழ்
tamilmakkalkurall@gmil.com
RNI No. : TNTAM24840
உள்ளது உள்ளபடி

காலை 10 மணி முதல் மதியம் 2 மணி வரை - முதல் முறை இந்த நோட்டீசை கொண்டுவருபவர்களுக்கு சிகிச்சை இலவசம்
MM கிளினிக்
அரசு மூத்த மருத்துவ அதிகாரி
8668018731
அழகிரி நகர் மெயின் ரோடு, வடபழனி, சென்னை - 26.

தொகுதி - 6 | நாளிதழ் | 6 பக்கங்கள் சென்னை, 24 நவம்பர் 2026 ரூ.2/- இதழ் - 135

நேபாளப் பிரதமர் பலேந்திர ஷா, குடியரசுத் தலைவர் திரௌபதி முர்முவுடன் சந்திப்பு



சென்னை – 24 நவம்பர், 2026

நேபாளப் பிரதமர் பலேந்திர ஷா, இன்று (23.11.2026) குடியரசுத் தலைவர் மாளிகையில் குடியரசுத் தலைவர் திரௌபதி முர்முவைச் சந்தித்துப் பேசினார்.

அப்போது, 2026 மார்ச் மாதம் நடைபெற்ற தேர்தலில் மக்கள் ஆதரவைப் பெற்று ஆட்சியமைத்துள்ள நேபாளப் பிரதமருக்கு குடியரசுத் தலைவர் வாழ்த்துத் தெரிவித்தார். மக்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றும் அவரது முயற்சிகள் வெற்றிபெறவும் அவர் வாழ்த்துகளைத் தெரிவித்தார்.

நேபாளத்தில் வெள்ளப்பெருக்கால் ஏற்பட்ட உயிரிழப்புகளுக்கு இரங்கல் தெரிவித்த திரௌபதி முர்மு, இக்கட்டான நேரத்தில் இந்தியா, நேபாளத்திற்கு விரைவான மனிதாபிமான உதவிகளையும், தொழில்நுட்ப ஆதரவையும் வழங்கியதைக் குறிப்பிட்டார். மீட்பு, மறுசீரமைப்புப் பணிகளிலும் தொடர்ந்து இந்தியா துணை நிற்கும் என்று அவர் உறுதியளித்தார்.

பேரிடர்களை முன்கூட்டியே எச்சரிக்கும் அமைப்புகளையும், பேரிடர் மேலாண்மையையும் இணைந்து வலுப்படுத்த வேண்டும் என்றும் குடியரசுத் தலைவர் வலியுறுத்தினார்.

பழைமையான நாகரிகப் பாரம்பரியம், மக்களிடையேயான ஆழமான நட்புறவு ஆகியவற்றின் அடிப்படையில் இந்தியா – நேபாளம் இடையிலான உறவு அமைந்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

ஐஎஃப்எஃப்ஐ 2026: காப்பிய வகைப்பாடுகள் – புராணங்கள், சூப்பர் ஹீரோக்கள் புதிய உலகங்கள் என்ற தலைப்பிலான கலந்துரையாடல் நடைபெற்றது



சென்னை – 24 நவம்பர், 2026

ஐஎஃப்எஃப்ஐ 2026: காப்பிய வகைப்பாடுகள் – புராணங்கள், சூப்பர் ஹீரோக்கள் புதிய உலகங்கள் என்ற தலைப்பிலான கலந்துரையாடல் நடைபெற்றது.

கோவாவில் நடைபெறும் 57- வது இந்திய சர்வதேசத் திரைப்பட விழாவில் (ஐஎஃப்எஃப்ஐ) 'காப்பிய வகைப்பாடுகள் – புராணங்கள், சூப்பர் ஹீரோக்கள் மற்றும் புதிய உலகங்கள்' என்ற தலைப்பிலான கலந்துரையாடல் அமர்வு நடைபெற்றது. இதில் இந்தியாவின் வளமான கலாச்சார பாரம்பரியத்தில் வேரூன்றிய புராணங்கள், சூப்பர் ஹீரோக்கள், கற்பனை உலகங்கள் குறித்த வியக்கத்தக்க சாத்தியக்கூறுகள் முதலியவை குறித்துப் பேசப்பட்டது. இந்த அமர்வில், திரைப்படத் தயாரிப்பாளர்கள் அயன் முகர்ஜி, பேசில் ஜோசப் ஆகியோர் பங்கேற்றனர்.

அவர்கள், சூப்பர் ஹீரோக்கள், புராணக் கதைகளைத் திரையில் கொண்டு வருவதில் உள்ள படைப்பாற்றல் சவால்கள், இந்திய நாட்டுப்புறக் கதைகள் மற்றும் ஆன்மீகத்தின் தாக்கம், திரைப்படக் கதையாடலில் தொழில்நுட்பத்தின் வளர்ந்து வரும் பங்கு குறித்து விரிவாக உரையாடினர்.

இந்தியாவில் சூப்பர் ஹீரோ திரைப்படங்களை உருவாக்குவதில் உள்ள சவால்கள் குறித்துப் பேசிய பேசில் ஜோசப், இந்தியத் திரையுலகில் நாயகர்கள் பாரம்பரியமாகவே மிகைப்படுத்தப்பட்ட பிம்பங்களுடன், பெரும்பாலும் சூப்பர் ஹீரோக்களுக்குரிய பண்புகளைக் கொண்டவர்களாக வே சித்தரிக்கப்பட்டு வருகிறார்கள் என்று குறிப்பிட்டார். சாதாரண மனிதர்களுக்குள் அசாதாரண ஆற்றல்கள் இருக்கக்கூடும் என்ற கருத்தாக்கமே, சூப்பர் ஹீரோ வகை கதைகளின் மீது தனது ஆர்வத்தைத் தூண்டியதாக அயன் முகர்ஜி தெரிவித்தார்.

மேலும் விவரங்களுக்கு இந்த செய்திக் குறிப்பை ஆங்கிலத்தில் இங்கே காணவும்:

தமிழ்நாட்டில் உள்ள பரனூர் சுங்கச் சாவடி வருவாய் 26.95 சதவீதம் அதிகரிப்பு

சென்னை – 24 நவம்பர், 2026 மத்திய சாலைப் போக்குவரத்து, நெடுஞ்சாலைத்துறை அமைச்சகம், நாடு முழுவதும் மின்னணு சுங்கக் கட்டண வசூல் முறையை மாற்றி, தடையற்ற போக்குவரத்து தொழில்நுட்பத்தின் மூலம், தடையற்ற சுங்கக் கட்டண முறையை செயல்படுத்தி வருகிறது. இதனால் வாகனங்கள், சோதனை சாவடிகளில் நிற்காமல் செல்வதால் வாகன ஓட்டிகளுக்கு பயணம் எளிதாக அமைந்துள்ளது.

தடையற்ற சுங்கக் கட்டண முறையானது மத்திய சாலைப் போக்குவரத்து, நெடுஞ்சாலைத் துறைக்கு வருவாயை அதிகரித்துள்ளது. தமிழ்நாட்டில் உள்ள பரனூர் உள்ளிட்ட 7 தடையற்ற சுங்கச் சாவடிகள் மூலம், நிகர வருவாயில் 19.84 சதவீத வருமானம் உயர்ந்துள்ளது.

பரனூர் சுங்கச்சாவடியில் 2026 அக்டோபர் 1- ம் தேதி அன்று தடையற்ற சுங்கச்சாவடி செயல்பாட்டுக்கு வந்த நிலையில், தற்போது இதன் வருவாய் 26.95 சதவீதம் அதிகரித்துள்ளதாக மத்திய சாலைப் போக்குவரத்து, நெடுஞ்சாலைத்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது. பரனூர் உள்ளிட்ட 7 தடையற்ற சுங்கச் சாவடிகள் மூலம், ரூ. 538.95 கோடி வருவாய் கிடைத்துள்ளதாகவும், இது முந்தைய காலகட்டத்தை காட்டிலும் சுமார் ரூ. 89.23 கோடி கூடுதல் வருவாய் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குரு தேக் பகதூரின் தியாக தினத்தை முன்னிட்டு அவருக்கு குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு அஞ்சலி



சென்னை – 24 நவம்பர், 2026 குரு தேக் பகதூரின் தியாக தினத்தை முன்னிட்டு அவருக்கு குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு அஞ்சலி.

குரு தேக் பகதூரின் தியாகத் திருநாளை முன்னிட்டு, குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு அவருக்கு அஞ்சலி செலுத்தியுள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள செய்தியில் கூறியிருப்பதாவது:

" குரு தேக் பகதூரின் வாழ்க்கை ஆன்மிகப் பற்று, தியாகம், இரக்கம், அசைக்க முடியாத துணிச்சல் ஆகியவற்றுக்கு சிறந்த எடுத்துக்காட்டாக விளங்குகிறது.

அவர் எப்போதும் உண்மை, நீதி, மனிதநேயம் ஆகிய உயரிய கொள்கைகளைக் கடைப்பிடித்தவர். மக்களின் மதச் சுதந்திரம் அச்சுறுத்தலுக்கு உள்ளானபோது, அவர்களின் உரிமைகளைக் காப்பதற்காகத் தனது உயிரையே தியாகம் செய்தவர்.

அவரது உன்னதமான தியாகம், மனித மாண்பையும் பிறருடைய உரிமைகளை மதிக்க வேண்டியதன் அவசியத்தையும் உலகுக்கு உணர்த்தும் அடையாளமாகத் திகழ்கிறது.

குரு தேக் பகதூரின் வாழ்க்கை, அநீதிக்கு எதிராக அச்சமின்றிப் போராடவும், அனைத்து மதங்களையும் மதிக்கவும், சமூகத்தில் அன்பு, சகோதரத்துவம், நல்லிணக்கம் ஆகியவற்றை வளர்க்கவும் தொடர்ந்து ஊக்கமளிக்கும்.

மேலும், அவரது உயரிய கொள்கைகளை நமது வாழ்க்கையில் பின்பற்றி, சுதந்திரம், சமத்துவம், ஒருவருக்கொருவர் மதிப்பளித்தல் ஆகிய அடிப்படைகளைக் கொண்ட சமூகத்தை உருவாக்க அனைவரும் உறுதியேற்க வேண்டும்."

பாதுகாப்பான, கண்ணியமான பணிமாற்றத்தால் முன்னேற்றப் பாதையில் சென்ற துப்புரவு பணியாளர்



சென்னை – 24 நவம்பர், 2026 கர்நாடக மாநிலம் மைசூரை சேர்ந்தவர் ராஜா (பெயர் மாற்றப்பட்டுள்ளது) . 41 வயதான இவர், சுமார் 15 ஆண்டுகளாக கைகளால் கழிவுநீர் தொட்டிகளை சுத்தம் செய்து வந்தார். பணியின் போது நச்சுப் பொருட்களின் வெளிப்பாட்டால், அவருக்கு அடிக்கடி உடல்நலக்குறைவு ஏற்பட்டது. இதன் காரணமாக நிதிச்சுமையால் மிகவும் சிரமப்பட்டு வந்தார்.

இந்நிலையில், இயந்திரமயமாக்கப்பட்ட சுகாதாரச் சூழலுக்கான தேசிய செயல் திட்டத்தின் கீழ், பாதுகாப்பு, இயந்திரமயமாக்கப்பட்ட சுகாதாரப் பயிற்சியை மேற்கொண்டார். தற்போது, இயந்திரங்கள் மூலம் கழிவுநீரை சுத்தம் செய்யும் பணியை மேற்கொண்டு வருகிறார். இவரது இந்த பணியானது, அபாயம் விளைவிக்க கூடிய கழிவுகளுடனான நேரடி தொடர்பை குறைத்து, பாதுகாப்பான, கண்ணியமான சூழலில் சுகாதாரப் பணிகளை மேற்கொள்ள உதவுகிறது.

ராஜாவின் உடல்நலம் மேம்பட்டுள்ளதுடன், வருமானமும் அதிகரித்துள்ளது.

நிலக்கரி ஆய்வு நிறுவனங்களுக்கான அங்கீகாரக் காலம் 3 ஆண்டுகளில் இருந்து 5 ஆண்டுகளாக நீட்டிப்பு

சென்னை – 24 நவம்பர், 2026 நிலக்கரித் துறை அமைச்சகம், கனிமச் சலுகை விதிகள், 1960- ல் மூன்றாவது திருத்தத்தை மேற்கொண்டுள்ளது. இதற்கான அறிவிக்கை, 2026 நவம்பர் 17 அன்று வெளியிடப்பட்டுள்ளது.

இதன்படி, அங்கீகாரம் பெற்ற கனிம ஆய்வு நிறுவனங்கள், சுரங்கத் திட்டங்களைத் தயாரிக்கும் நிறுவனங்கள் ஆகியவற்றின் அங்கீகாரக் காலம் 3 ஆண்டுகளில் இருந்து 5 ஆண்டுகளாக நீட்டிக்கப்பட்டுள்ளது.

இந்த மாற்றத்தால், அவ்வப்போது மேற்கொள்ளப்படும் மதிப்பீடுகள், அங்கீகாரத்தைப் புதுப்பிக்கும் நடைமுறைகள் குறையும். இதனால், மீண்டும் மீண்டும் மதிப்பீடு செய்வதற்கும் அங்கீகாரம் பெறுவதற்கும் செலவிடும் நேரம் மிச்சமாகும்.

மேலும், புவியியல் ஆய்வு அறிக்கைகள், சுரங்கத் திட்டங்களைத் தொடர்ந்து தயாரிப்பது ஆகியவற்றுக்கு இந்த நீண்டகால அங்கீகாரம் உதவும். நிலக்கரி, பழுப்பு நிலக்கரிச் சுரங்கப் பகுதிகளைச் செயல்பாட்டுக்குக் கொண்டுவர ஆய்வு நிறுவனங்களின் அறிக்கைகளும் செயல் திட்டங்களும் அவசியமாகும்.

நிலக்கரித் துறையில் தொழில் தொடங்குவதை எளிதாக்க இந்த நடவடிக்கை முக்கிய முன்னேற்றமாக அமைந்துள்ளது என நிலக்கரி அமைச்சகம் தெரிவித்துள்ளது.

ஆரோக்கியமாக உணர்கிறீர்களா? உங்கள் LDL-C அளவு இலக்கு அளவில் உள்ளதா? நீங்கள் கவனிக்காத அபாயம்

சென்னை – 24 நவம்பர், 2026

ஆரோக்கியமாக உணர்வது மனதிற்கு ஆறுதல் அளிக்கிறது. நீங்கள் தவறாமல் உடற்பயிற்சி செய்யலாம், நன்றாகச் சாப்பிடலாம், மேலும் உங்களுக்கு வெளிப்படையான அறிகுறிகள் எதுவும் இல்லாமல் இருக்கலாம். ஆனால் இதய ஆரோக்கியத்தைப் பொறுத்தவரை, பெரும்பாலும் கவனிக்கப்படாத ஒரு முக்கியமான அளவு உள்ளது: அதுதான் குறைந்த அடர்த்தி லிப்போபுரோட்டீன் கொலஸ்ட்ரால் (LDL-C). ஒரு வழக்கமான கொலஸ்ட்ரால் பரிசோதனை உங்கள் கொலஸ்ட்ரால் அளவுகள் எந்த நிலையில் உள்ளன என்பதைத் தெரிவிக்கக்கூடும் என்றாலும், உங்கள் தனிப்பட்ட உடல்நல நிலைக்கு ஏற்ப உங்கள் LDL-C சரியான அளவில் உள்ளதா என்பதைப் புரிந்துகொள்வதும் அதே அளவு முக்கியமானது.

சென்னை, எம்ஜிஎம் ஹெல்த்கேரின் இன்டர்வென்ஷனல் கார்டியாலஜி, ஸ்ட்ரக்சுரல் மற்றும் எண்டோவாஸ்குலர் இன்டர்வென்ஷன்ஸ் பிரிவின் மூத்த ஆலோசகரான பேராசிரியர் டாக்டர் பாபு ஏழுமலை அவர்கள், " வயது மற்றும் உடல் உழைப்பற்ற வாழ்க்கை முறை ஆகியவை இதய ஆரோக்கியத்திற்கான அறியப்பட்ட ஆபத்துக் காரணிகளாக இருந்தாலும், அவை மட்டுமே முழுமையான காரணத்தைக் கூறிவிடுவதில்லை. சமச்சீரான உணவைப் பின்பற்றுபவர்கள், தவறாமல் உடற்பயிற்சி செய்பவர்கள் மற்றும் நல்ல உடல் தகுதியைப் பராமரிப்பவர்கள் உட்பட, இளம் வயதினரையும் கூட உயர்ந்த எல்.டி.எல்-சி (LDL-C) பாதிக்கலாம். இளமையாகவும் சுறுசுறுப்பாகவும் இருப்பது, எல்.டி.எல்-சி அளவுகள் உகந்த வரம்பிற்குள் உள்ளன என்றோ அல்லது ஒருவர் இதய நோய்க்கான ஆபத்திலிருந்து பாதுகாக்கப்பட்டுள்ளார் என்றோ அவசியமாக அர்த்தப்படுத்துவதில்லை. இதனால்தான் கொலஸ்ட்ரால் பரிசோதனையை ஆரம்பத்திலேயே, குறிப்பாக 18 வயதிலிருந்தே தொடங்க வேண்டும். மேலும், தனிப்பட்ட ஆபத்துக் காரணிகள் மற்றும் மருத்துவ ஆலோசனையின் அடிப்படையில் பொருத்தமான இடைவெளிகளில் அதைத் தொடர வேண்டும். உயர்ந்த எல்.டி.எல்-சி அளவை முன்கூட்டியே கண்டறிவது, தனிநபர்கள் சரியான நேரத்தில் நடவடிக்கை எடுக்கவும், தேவைப்படும் இடங்களில், பொருத்தமான சிகிச்சையைத் தொடங்கி, சிறந்த நீண்டகால இதய ஆரோக்கியத்தை ஆதரிப்பதற்காக மருத்துவ மேற்பார்வையின் கீழ் அதைத் தொடர்ந்து பராமரிக்கவும் அனுமதிக்கிறது" என்று கூறினார்.



இந்தியாவின் வளர்ச்சிக்கான பிரதமரின் தொலைநோக்குப் பார்வைக்கு ஆதரவாக தொழில்துறையும் அரசும் ஒன்றிணைய அனில் அகர்வால் அழைப்பு விடுக்கிறார்

சென்னை – 24 நவம்பர், 2026

சமீபத்திய சமூக ஊடகப் பதிவில், வேதாந்தா குழுமத்தின் தலைவர் அனில் அகர்வால், FICCI மாநாட்டில் தொழில்துறையினருக்கு பிரதமர் ஆற்றிய உரை குறித்துப் பகிர்ந்துகொண்டார். இந்தியாவின் பொருளாதார வளர்ச்சியை விரைவுபடுத்தவும், பெரிய அளவிலான வேலைவாய்ப்புகளை உருவாக்கவும் அரசுக்கும் தனியார் துறைக்கும் இடையே அதிக ஒத்துழைப்பு தேவை என்று அவர் அழைப்பு விடுத்தார்.

உற்பத்தித்திறனை மேம்படுத்தவும், வேலைவாய்ப்புகளை உருவாக்கவும், MSME-களின் வளர்ச்சியை ஊக்குவிக்கவும் தனியார் துறை நிர்வாகத்தின் சாத்தியக்கூறுகளை முக்கியப்படுத்தி, இயற்கை வளங்கள், எரிசக்தி, உற்பத்தி மற்றும் கனரக தொழில்துறை ஆகிய துறைகளில் அரசுக்கு சொந்தமான நிறுவனங்களை அதிக அளவில் தனியார்மயமாக்க வேண்டும் என்று அவர் பரிந்துரைத்துள்ளார். தனியார்மயமாக்கலுடன் ஆட்குறைப்பு இருக்கக்கூடாது மற்றும் வேலைவாய்ப்பு மும்மடங்கு அதிகரிக்க வேண்டும் ஆகிய இரண்டு நிபந்தனைகளும் இணைக்கப்பட வேண்டும் என்று அவர் பரிந்துரைக்கிறார்.

கார்ப்பரேட் கையகப்படுத்துதலுக்கு மாற்றாக பொதுமக்களுக்கு பங்கு விநியோகம் செய்வதையும் அவர் முக்கிய படுத்துகிறார். தனியார்மயமாக்கலின் மூலம் கிடைக்கும் வருவாயை, அரசாங்கக் கடனைக் குறைப்பதற்கும் உள்கட்டமைப்பில் முதலீடு செய்வதற்கும் பயன்படுத்த வாய்ப்புள்ளதன் மூலம் பெருநிறுவனங்களைக் கையகப்படுத்துவதற்கு மாற்றாகப் பொதுப் பங்கு விநியோகத்தையும் அவர் சுட்டிக்காட்டுகிறார்.

நம்பிக்கை மீது பிரதமர் கொண்டுள்ள கவனத்தை வலியுறுத்தும் அகர்வால், நீண்ட ஒப்புதல் செயல்முறைகளுக்கு பதிலாக சுயச் சான்றழிப்பு மற்றும் எளிமையான ஒழுங்குமுறைகளைக் கொண்டுவர அகர்வால் அழைப்பு விடுத்துள்ளார். தெளிவான விதிகளை அரசு வகுக்க வேண்டும், தணிக்கைகள் மூலம் இணக்கத்தை உறுதி செய்ய வேண்டும்; இதன்மூலம் வணிகங்களும் புதிய தொழில்களும் விரைவாகத் தொடங்கி விரிவாக்க முடியும் என்று அவர் நம்புகிறார்.

கனிமங்கள், உலோகங்கள் மற்றும் ஹைட்ரோகார்பன்கள் துறைகளில் உள்ள இளம் தொழில்முனைவோர் மற்றும் புத்தொழில் நிறுவனங்களுக்கு ஆய்வுப் பணி ஒரு குறிப்பிடத்தக்க வாய்ப்பு என்பதை அகர்வால் சுட்டிக்காட்டியுள்ளார். ஆய்வுப் பணி புத்தொழில் நிறுவனங்கள் தங்கள் கண்டுபிடிப்புகளை ONGC மற்றும் ஹிந்துஸ்தான் ஜிங்க் போன்ற பெரிய அளவிலான சுரங்கம் மற்றும் செயலாக்க முதலீடுகளை மேற்கொள்ளும் திறன் கொண்ட நிறுவனங்களுக்கு விற்க அனுமதிப்பதை அவர் வாதிடுகிறார். இது நூற்றுக்கணக்கான ஆய்வுப் பணி புத்தொழில் நிறுவனங்களை ஊக்குவிக்கும், தொழில்முனைவு வாய்ப்புகளை உருவாக்கும் மற்றும் இந்தியாவின் உள்நாட்டு வள சூழலமைப்பை வலுப்படுத்தும் என்று அவர் நம்புகிறார்.

அவரது பதிவை முடிக்கையில், தனியார்மயமாக்கல், சுயச் சான்றளிப்பு மற்றும் ஆய்வு ஆகியவற்றை மையமாகக் கொண்டு ஒரு தேசிய இயக்கத்தை உருவாக்க தொழில்துறை, அரசு மற்றும் குடிமக்கள் அனைவரும் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும் என்று அவர் அழைப்பு விடுத்துள்ளார். உணவில் தன்னிறைவு அடைவதில் ஜெய் ஜவான் ஜெய் கிசான் இயக்கம் பெற்ற வெற்றியுடன் ஒப்பீடு செய்து, வேலைவாய்ப்புகளை உருவாக்குதல், வருமானத்தை உயர்த்துதல் மற்றும் இந்திய ரூபாயை வலுப்படுத்துதல் ஆகியவற்றுக்காக இதேபோன்ற கூட்டு முயற்சியை அவர் பரிந்துரைக்கிறார்.

இந்தியத் திருமணங்களின் கதைகளையும் பாரம்பரியங்களையும் கொண்டாடும் வகையில், ஜான்வி கபூர் இடம்பெறும் 'கஹானி' எனும் புதிய முயற்சியை பீமா அறிமுகப்படுத்துகிறது.

சென்னை – 24 நவம்பர், 2026

தென்னிந்தியாவின் மிகவும் மதிக்கப்படும் மற்றும் பாரம்பரியமிக்க நகை நிறுவனங்களில் ஒன்றான பீமா கோல்டு, நடிகை ஜான்வி கபூர் இடம்பெறும் 'கஹானி – பிரைடல் ஸ்டோரிஸ் பை பீமா' என்ற புதிய விளம்பரத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. இந்தியத் திருமணங்களின் செழுமையான பாரம்பரியத்தை அடிப்படையாகக் கொண்ட இந்த விளம்பரம், ஒவ்வொரு மணப்பெண்ணின் பயணத்தையும் தனித்துவமாக்கும் கதைகள், உணர்வுகள் மற்றும் தனிப்பட்ட வெளிப்பாடுகளைக் கொண்டாடுகிறது.

'செலிபிரேட்டிங் தி பிரைட்ஸ் ஆப் நவ்' என்ற கருத்தை மையமாகக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ள 'கஹானி', இன்றைய மணப்பெண்கள் தாங்கள் வளர்ந்த பாரம்பரியங்களை ஏற்றுக்கொள்வதோடு, தங்கள் திருமணக் கொண்டாட்டங்களில் தங்களின் தனித்துவத்தையும் கண்ணோட்டத்தையும் எவ்வாறு கொண்டு வருகிறார்கள் என்பதையும் இந்த விளம்பரம் வெளிப்படுத்தி உள்ளது.

பாரம்பரியத்திற்கும் சுய விருப்பத்திற்கும் இடையிலான இந்த வளர்ந்து வரும் உறவைப் படம்பிடித்துக் காட்டும் இந்தப் பிரச்சாரம், திருமண அனுபவத்தில் மணப்பெண் நகைகள் எவ்வாறு ஒரு பிரிக்க முடியாத அங்கமாகத் திகழ்கின்றன என்பதை எடுத்துக்காட்டுகிறது.

இதில் உள்ள ஒவ்வொரு படைப்பும் நகையை வெறும் ஆபரணமாக மட்டுமல்லாமல், தலைமுறைகளை இணைக்கும் மற்றும் நினைவுகளைப் பாதுகாக்கும் ஒரு பொக்கிஷமாகக் கொண்டாடுகிறது. ஜான்வி கபூர் இடம்பெற்றுள்ள 'கஹானி', தனது பாரம்பரியத்தைப் போற்றும் அதே வேளையில் தனது தனித்துவத்தையும் வெளிப்படுத்தும் நவீன இந்திய மணப்பெண்ணைக் கொண்டாடுகிறது. இந்தப் பிரச்சாரத்தின் மூலம், இன்றைய திருமண வாடிக்கையாளர்களுடனும், மாறிவரும் மணப்பெண் நகைத் துறையுடனும் தனது பிணைப்பை பீமா மேலும் வலுப்படுத்துகிறது.



கர்நாடகா, தமிழ்நாடு மற்றும் ஆந்திரப் பிரதேசம் ஆகிய மாநிலங்களில் உள்ள பீமா ஷோரூம்களில் அதன் பிரத்யேகத் திருமண நகைத் தொகுப்புகள் காட்சிப்படுத்தப்பட உள்ளது.

பீமா தனது அடுத்த நூற்றாண்டை நோக்கிய பயணத்தைத் தொடரும் நிலையில், தலைமுறைகளை இணைக்கும் பாரம்பரியங்கள், உணர்வுகள் மற்றும் கதைகளின் காலத்தால் அழியாத வெளிப்பாடாக நகைகள் உள்ளன என்ற நிறுவனத்தின் நம்பிக்கையை 'கஹானி' மீண்டும் உறுதிப்படுத்துகிறது.

போதைப்பொருள் இல்லாத இந்தியா இயக்கத்தின் வினாடி வினாப் போட்டியில் இதுவரை 60,693 பேர் பங்கேற்பு

சென்னை – 24 நவம்பர், 2026

போதைப்பொருள் இல்லாத இந்தியாவை உருவாக்கும் நோக்கில், மத்திய சமூக நீதி, அதிகாரமளித்தல் அமைச்சகம் சார்பில் 'போதைப்பொருள் இல்லாத இளைஞர்கள், வளர்ச்சியடைந்த இந்தியா' என்ற இணையவழி வினாடி வினாப் போட்டி 2026 அக்டோபர் 26- ம் தேதி தொடங்கப்பட்டது. இன்று வரை இதில் மொத்தம் 60,693 குடிமக்கள் பங்கேற்றுள்ளனர்.

போதைப்பொருள் பயன்பாட்டினால் ஏற்படும் தீய விளைவுகள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதும், போதைப்பொருள் இல்லாத இந்தியாவை உருவாக்கும் முயற்சியில் இளைஞர்களைத் தீவிரமாகப் பங்களிக்க ஊக்குவிப்பதும் இந்த முன்முயற்சியின் நோக்கமாகும்.

நவம்பர் 25 வரை நடைபெறும் இந்த வினாடி-வினாப் போட்டியில் பங்கேற்க ஆர்வம் உள்ளவர்கள், https://mybharat.gov.in/quizzes/yuva/detail/Url9dIlwCinQVSf8lwPB9w/ என்ற இணைப்பை அணுகலாம். இந்தப் பிரச்சாரம், சுமார் 35.96 கோடி மக்களைச் சென்றடைந்துள்ளது. இதில் 14.39 கோடி இளைஞர்களும், 11.37 கோடி பெண்களும் அடங்குவர்.




Printed by R.SATHYANARAYANAN and published by R.SATHYANARAYANAN on behalf of R.SATHYANARAYANAN and printed at Chennai Offset Printers, No.191, 212, Khaja Khan Bhandar Street, Ellis Road, Chennai-600 002, and published at No.11, South Perumal Koil Street, Vadapalani, Chennai - 600 026.
Editor: R.SATHYANARAYANAN

டாபர் ஹனி இந்திய வீடுகளில் அதன் அன்றாட பங்கையும், தரத்தால் ஆதரிக்கப்படும் நம்பிக்கையையும் கொண்டாடும் புதிய பிரச்சாரத்தை வெளியிடுகிறது

சென்னை – 24 நவம்பர், 2026 இந்திய வீடுகளில் தேனின் பல்துறை பயன்பாட்டைக் கொண்டாடும் மற்றும் பிராண்டின் தரச் சான்றுகளை முன்னிலைப்படுத்தும் மற்றும் மையப்படுத்தும் வகையில் டாபர் ஹனிக்கான புதிய தொலைக்காட்சி விளம்பரத்தை (TVC) டாபர் இந்தியா லிமிடெட் வெளியிட்டுள்ளது. 30 வினாடிகள் கொண்ட இந்த விளம்பரப்படம், டாபர் தேனை தனித்துவப்படுத்தும், 22 தர அளவுருக்களில் தேன் பரிசோதிக்கப்படுதல், தேனீ வளர்ப்பாளர்களிடமிருந்து தொழிற்சாலை வரை கண்டறியக்கூடிய தன்மை, மற்றும் AGMARK சிறப்புத் தரச் சான்றளிப்பு ஆகிய மூன்று சான்றுப் புள்ளிகளை அடிப்படையாகக் கொண்டுள்ளது.

இளம் பெண்கள், தாய்மார்கள் மற்றும் குடும்பங்கள் தேனை தங்கள் வழக்கமான பழக்கங்களில் ஒரு பகுதியாக மாற்றியுள்ளதை காட்டுகின்ற இந்தத் திரைப்படம், சமையலறையில் மிகவும் பல்துறை பொருட்களில் ஒன்றாக தேனை முன்வைக்கிறது. தேன் ஒரு அன்றாட அத்தியாவசியப் பொருள் என்பதற்கான வாதத்தை முன் வைக்கின்ற வகையில், வெதுவெதுப்பான நீர் மற்றும் தேனுடன் நாளைத் தொடங்குவது, ஸ்மூத்தியை இனிப்பாக்குவது, ஒரு இயற்கை இனிப்பானாக அதைத் தேர்ந்தெடுப்பது அல்லது குடும்ப உணவுகளில் ஒரு நல்ல சுவையை சேர்ப்பது வரை, ஒரு பாட்டில் வெவ்வேறு மக்கள், விருப்பங்கள் மற்றும் நாளின் தருணங்களுக்கு எவ்வாறு பொருந்துகிறது என்பதை இது காட்டுகிறது.



“டாபர் நிறுவனத்தில், தரம் மற்றும் வெளிப்படைத்தன்மை மீதான நிலையான அர்ப்பணிப்பின் மூலம் நம்பிக்கை பெறப்படுகிறது என்று நாங்கள் நம்புகிறோம். எங்களின் புதிய பிரச்சாரமான ‘ஆப்கா விஸ்வாஸ் பனாதா ஹை ஹமாரே ஹனி கோ சப்சே காஸ்’, ஒவ்வொரு நாளும் டாபர் தேனைத் தேர்ந்தெடுக்கும் லட்சக்கணக்கான நுகர்வோரைக் கொண்டாடுவதாகும். அவர்களின் நம்பிக்கை, உயர்ந்த தரத் தரங்களைப் பராமரிக்க எங்களை ஊக்குவிக்கிறது; ஒவ்வொரு டாபர் ஹனி பேக்கும், குடும்பங்கள் எங்களிடமிருந்து எதிர்பார்க்கும் தூய்மையையும் உறுதியையும் வழங்குவதை உறுதிசெய்கிறது” என்று டாபர் இந்தியா லிமிடெட் நிறுவனத்தின் இயக்குநர் (சந்தைப்படுத்தல்) ஸ்ரீராம் பத்மநாபன் தெரிவித்தார்.

45-வது ஐஐடிஎஃப் கண்காட்சி: சமூக நீதி, அதிகாரமளித்தல் அமைச்சகத்தின் அரங்கம், சுமார் ரூ. 1.16 கோடி விற்பனை



சென்னை – 24 நவம்பர், 2026 45-வது ஐஐடிஎஃப் கண்காட்சி: சமூக நீதி, அதிகாரமளித்தல் அமைச்சகத்தின் அரங்கம், சுமார் ரூ. 1.16 கோடி மதிப்பிலான விற்பனையைப் பதிவு செய்துள்ளது.

புதுதில்லியில் நடைபெற்று வரும் 45- வது இந்திய சர்வதேச வர்த்தகக் கண்காட்சியில் (ஐஐடிஎஃப் 2026), சமூக நீதி, அதிகாரமளித்தல் அமைச்சகத்தின் அரங்கம், நவம்பர் 22, 2026 நிலவரப்படி சுமார் ரூ. 1.16 கோடி மதிப்பிலான விற்பனையைப் பதிவு செய்துள்ளது. இது பார்வையாளர்களிடமிருந்து கிடைத்துள்ள ஊக்கமளிக்கும் வரவேற்பையும், உள்நாட்டுத் தயாரிப்புகள், பாரம்பரியக் கைவினைத்திறன் மீதான வளர்ந்து வரும் வெளிப்படுத்துகிறது.

இந்த அரங்கம், இந்தியாவின் பன்முக கலாச்சார பாரம்பரியம், பாரம்பரியத் திறன்கள், உள்நாட்டு கைவினைத் திறன் ஆகியவற்றை வெளிப்படுத்துகிறது. இது பார்வையாளர்களுக்கு, உண்மையான கைவினைப் பொருட்களைக் கண்டறியும் வாய்ப்பை வழங்குவதுடன், நேரடியாகப் பொருட்களை வாங்குவதன் மூலம் கைவினைக் கலைஞர்களின் பொருளாதார மேம்பாட்டிற்கும் பங்களிக்க உதவுகிறது.

2026 நவம்பர் 27 வரை நடைபெறும் இந்தக் கண்காட்சியில், 19 மாநிலங்களைச் சேர்ந்த 130- க்கும் மேற்பட்ட கைவினைக் கலைஞர்கள் பங்கேற்கின்றனர்.

ரசிகர்களுக்கு சிறந்த திரையனுபவத்தைத் தரும் திரைப்படம் ‘சிக்னல் அட் 11.30'" - இசையமைப்பாளர் டி இமான்

சென்னை – 24 நவம்பர், 2026 மர்மம், எதிர்பாராத திருப்பங்கள், ஆழமான உணர்வுகள் என அனைத்தும் கலந்த திரைப்படமாக ‘சிக்னல் அட் 11.30’ உருவாகியுள்ளதாக இசையமைப்பாளர் டி. இமான் பாராட்டியுள்ளார்.

இப்படத்தின் பாடல்கள் ரசிகர்கள் மத்தியில் பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ள நிலையில், பின்னணி இசைப் பணிகளைத் தொடங்குவதற்கு முன்பே படத்தைப் பார்த்த டி. இமான், அதன் கதைக்களமும் உணர்வுப்பூர்வமான காட்சிகளும் தன்னை வெகுவாகக் கவர்ந்ததாகத் தெரிவித்துள்ளார். வரும் நவம்பர் 27ஆம் தேதி இப்படம் திரையரங்குகளில் வெளியாக உள்ள நிலையில், அவரது பாராட்டு படத்தின் மீதான எதிர்பார்ப்பை மேலும் அதிகரித்துள்ளது. ஒரு திரைப்படத்தின் பின்னணி இசையை உருவாக்குவதற்கு முன்பாகவே அதைப் பார்த்து, கதையின் தன்மையையும் காட்சிகளின் உணர்வையும் புரிந்துகொள்வது இசையமைப்பாளர்களுக்கு முக்கியமானது. அந்த வகையில், ‘சிக்னல் அட் 11.30’ திரைப்படம் தனக்கு வித்தியாசமான அனுபவத்தைத் தந்ததாக டி. இமான் குறிப்பிட்டுள்ளார்.

இதுகுறித்து அவர் கூறுகையில், “வணிக ரீதியான பொழுதுபோக்குப் படங்கள் முதல் கதைக்கு முக்கியத்துவம் அளிக்கும் திரைப்படங்கள் வரை பல்வேறு வகையான படங்களில் பணியாற்றியிருக்கிறேன். ஆனால், ‘சிக்னல் அட் 11.30’ எனக்கு வித்தியாசமான அனுபவமாக இருந்தது. மர்மம், விறுவிறுப்பு, எதிர்பாராத திருப்பங்கள் என ஒரு திரில்லர் படத்துக்குத் தேவையான அனைத்து அம்சங்களும் இதில் இருக்கின்றன. அதே நேரத்தில், பார்வையாளர்களை நெகிழச் செய்யும் உணர்வுப்பூர்வமான கதையும் படத்தின் பலம். பின்னணி இசைப் பணிகளைத் தொடங்குவதற்கு முன்பே படத்தைப் பார்த்தது, அதன் முழுமையான கதையையும் உணர்வையும் புரிந்துகொள்ள உதவியது. இயக்குநர் மலர்விழி நடேசனின் காட்சியமைப்பு, நடிகர்களின் நடிப்பு, படத்தின் தொழில்நுட்பத் தரம் ஆகியவற்றுக்கு ஏற்ற வகையில் பின்னணி இசையை அமைக்க விரும்பினேன். இந்தப் படத்தில் எனது இசைப் பணியில் புதுமையான முயற்சிகளையும் மேற்கொள்ள இது உந்துதலாக இருந்தது. உணர்வுப்பூர்வமான கதை, விறுவிறுப்பான காட்சிகள், எதிர்பாராத திருப்பங்கள் என அனைத்தும் இணைந்துள்ள ‘சிக்னல் அட் 11.30’ ரசிகர்களுக்கு மறக்க முடியாத திரையரங்க அனுபவத்தை வழங்கும் என நம்புகிறேன்” என்றார். இப்படத்தில் சந்தோஷ் பிரதாப், பவ்யா திரிகா, புஜிதா பொன்னாடா ஆகியோர் முதன்மைக் கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர். மேலும், ஜெயப்பிரகாஷ், முனிஷ்காந்த் உள்ளிட்ட பலரும் முக்கியக் கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர். அலர் ஸ்டுடியோஸ் சார்பில் மலர்விழி நடேசன் மற்றும் டாக்டர் ஷிவானி சுப்பிரமணி இப்படத்தை வழங்குகின்றனர். ராஜா பட்டாச்சார்ஜி படத்தொகுப்பாளராகவும் பணியாற்றியுள்ளனர். ‘சிக்னல் அட் 11.30’ திரைப்படம் வரும் நவம்பர் 27 ஆம் தேதி திரையரங்குகளில் வெளியாகிறது.



9 மாதங்களில் 1 கோடி ஹெச்பிவி தடுப்பூசி செலுத்தி இந்தியா சாதனை: பிரதமர் நரேந்திர மோடி பாராட்டு

சென்னை – 24 நவம்பர், 2026 9 மாதங்களில் 1 கோடி ஹெச்பிவி தடுப்பூசி செலுத்தி இந்தியா சாதனை: பிரதமர் நரேந்திர மோடி பாராட்டு.

இந்தியாவில் 9 மாதங்களுக்குள் 14 வயது சிறுமிகளுக்கு 1 கோடிக்கும் அதிகமான ஹெச்பிவி (HPV) தடுப்பூசி டோஸ்கள் செலுத்தப்பட்டுள்ளன. இந்தச் சாதனையைப் பிரதமர் நரேந்திர மோடி பாராட்டியுள்ளார். இது நோய்கள் வருவதற்கு முன்பே தடுக்கும் மருத்துவப் பாதுகாப்பை வலுப்படுத்துவதில் முக்கிய மைல்கல் என்று அவர் தெரிவித்துள்ளார். ஒவ்வொரு தடுப்பூசியும் சிறுமிகளை கருப்பைவாய் புற்றுநோயில் இருந்து பாதுகாத்து, அவர்களுக்கு ஆரோக்கியமான எதிர்காலத்தை உறுதி செய்வதற்கான ஒரு படி என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த பிப்ரவரி 2026- ல் பிரதமரால் தொடங்கப்பட்ட தேசிய தடுப்பூசித் திட்டத்தின் கீழ், 14 வயதுடைய சிறுமிகளுக்கு பெற்றோரின் ஒப்புதலுடன் அரசு மருத்துவமனைகளில் இலவசமாக ஒரே ஒரு தவணை தடுப்பூசி செலுத்தப்படுகிறது. ஆண்டுக்கு சுமார் 1.2 கோடி சிறுமிகளுக்குத் தடுப்பூசி செலுத்த இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதில் இதுவரை சுமார் 87 சதவீத இலக்கு எட்டப்பட்டுள்ளது.

குஜராத், உத்தரப் பிரதேசம், ஆந்திரப் பிரதேசம், மிசோரம், மத்தியப் பிரதேசம், பீகார் ஆகிய 6 மாநிலங்கள் 100 சதவீத இலக்கை எட்டியுள்ளன. 12 மாநிலங்களில் 80 சதவீதத்துக்கும் அதிகமான இலக்கு எட்டப்பட்டுள்ளது. அசாமில் 95.63 சதவீதம், தெலங்கானாவில் 95.28 சதவீதம், கர்நாடகாவில் 93.16 சதவீதம், உத்தராகண்டில் 90.17 சதவீதம் எட்டப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் 76.12 சதவீத இலக்கு எட்டப்பட்டுள்ளது.

HOPES Trust
மாற்றம் என்பது சொல் அல்ல செயல்
MY ARK Centre
அறிவுசார் குறைபாடுடையோருக்கான
இலவச சிறப்பு பள்ளி
(த.நாடு அரச அங்கீகாரம் பெற்றது)
சிறு உதவிகளும் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தும்.
அன்பளிப்புச் செய்து ஆதரவு கொடுங்கள்.
உதவிடுங்கள்
GPay எண்ணுக்கு அனுப்ப:
9841359935 / 9043148388
SB A/c: 5661065244
Central Bank of India
Kooteripattu Branch
IFS Code: CBIN0282413
hopestrust24@gmail.com | 9790439935 | ரெட்டனை ரோடு,
தென்பசியார் கிராமம், திண்டிவனம் தாலுக்கா, விழுப்புரம்-604302

உதவிடுவீர்
HOPES Trust
MY ARK Centre for Intellectual Disability
தமிழ்நாடு அரசு அங்கீகாரம் பெற்றது
அறிவுசார் குறைபாடுடையோருக்கான இலவச சிறப்பு பள்ளி
HOPES Trust உங்களை ஒரு உதவும் கரமாக ஆதரவு தருவது பெருமைக்கிழவு.
உங்கள் சிறிய பங்களிப்பு அறிவுசார் குறைபாடுள்ள குழந்தில் பெரிய மாற்றத்தை ஏற்படுத்தும்.
நன்கொடை அளிக்க கீழே உள்ள கட்டண முறைகளைப் பயன்படுத்தவும்.
GPay எண்களுக்கு அனுப்ப (To GPay Numbers):
9841359935 / 9043148388
HOPES Trust
Central Bank of India
Kooteripattu Branch
SB A/c No. 5661065244
IFS Code: CBIN0282413
hopestrust24@gmail.com ◦ ரெட்டனை ரோடு, தென்பசியார் கிராமம், திண்டிவனம் தாலுக்கா, விழுப்புரம் - 604302

மஹிந்திரா XEV 9S இந்தியாவின் பாதுகாப்பான 7-இருக்கை SUV ஆகிறது

சென்னை – 24 நவம்பர், 2026

மஹிந்திரா நிறுவனம் தனது XEV 9S வாகனம், ICE மற்றும் மின்சாரப் பிரிவுகள் இரண்டிலும் இந்தியாவின் பாதுகாப்பான 7-இருக்கை SUV ஆக இதை மாற்றுகின்ற வகையில், பாரத் புதிய கார் மதிப்பீட்டுத் திட்டத்தின் (Bharat NCAP) கீழ் 5-நட்சத்திர மதிப்பீட்டைப் பெற்றுள்ளதை இன்று அறிவித்தது, மேலும், இந்தியாவில் இந்த உயரிய மதிப்பீட்டைப் பெற்ற முதல் 7-இருக்கை கொண்ட மின்சார வாகனம் (EV) இதுவாகும்.

இந்த,XEV 9S ஆனது பெரியவர் பயணர் பாதுகாப்பில் (AOP) 32 புள்ளிகளில் 31.15 புள்ளிகளையும், குழந்தை பயணர் பாதுகாப்பில் (COP) 49 புள்ளிகளில் 45 புள்ளிகளையும் பெற்று, இதுவரை பாரத் NCAP-இல் சோதிக்கப்பட்ட அனைத்து 7-இருக்கை வாகனங்களிலும் மிக உயர்ந்த மொத்த மதிப்பெண்ணான 76.15 புள்ளிகளை எட்டியுள்ளது. இந்த 5-நட்சத்திர மதிப்பீடு, பாதுகாப்பை தனது SUV பொறியியல் மற்றும் வளர்ச்சித் தத்துவத்தின் ஒரு அடிப்படை அங்கமாக மாற்றுவதற்கான மஹிந்திராவின் உறுதிப்பாட்டை வலுப்படுத்துகிறது.

இந்த பிளாட்ஃபார்மின் வலுவான பாதுகாப்பு பொறியியலை மேலும் உறுதிப்படுத்துகின்ற வகையில் இந்த முடிவின் மூலம், INGLO பிளாட்ஃபார்மில் கட்டப்பட்ட அனைத்து மூன்று மஹிந்திரா எலக்ட்ரிக் SUV-களும் இப்போது 5-நட்சத்திர பாரத் NCAP மதிப்பீடுகளைப் பெற்றுள்ளன.

மஹிந்திரா & மஹிந்திரா லிமிடெட் நிறுவனத்தின் ஆட்டோமோட்டிவ் வணிகப் பிரிவு தலைவரும், மஹிந்திரா எலக்ட்ரிக் ஆட்டோமொபைல் லிமிடெட் நிறுவனத்தின் நிர்வாக இயக்குநருமான டாக்டர் வேலுசாமி R கூறியதாவது: இந்த "XEV 9S-க்கு நாடு முழுவதும் உள்ள வாடிக்கையாளர்களிடமிருந்து கிடைத்துள்ள மகத்தான வரவேற்பிற்கு நாங்கள் நன்றியுள்ளவர்களாக இருக்கிறோம். இந்தியாவின் நம்பர் 1 EV* என்ற நிலையை எட்டியிருப்பது, இந்த பிராண்டின் மீது வாடிக்கையாளர்கள் வைத்துள்ள நம்பிக்கையின் பிரதிபலிப்பாக இருக்கிறது.வடிவமைப்பு, செயல்திறன் மற்றும் தொழில்நுட்பத்தில் மட்டுமல்ல, பாதுகாப்பிலும் சிறந்து விளங்கும் ஒரு வாகனத்தைத் தேர்ந்தெடுக்கிறார்கள் என்ற உறுதியை வாடிக்கையாளர்களுக்கு அளிக்கின்ற இந்த 5-நட்சத்திர பாரத் NCAP மதிப்பீடு அந்த நம்பிக்கையை மேலும் வலுப்படுத்துகிறது. எங்கள் வாடிக்கையாளர்கள் தொடர்ந்து காட்டிவரும் நம்பிக்கைக்காக அவர்களுக்கு நாங்கள் நன்றி கூறுகிறோம், அவர்களின் எதிர்பார்ப்புகளை மிஞ்சும் தயாரிப்புகளை வழங்குவதற்கு நாங்கள் தொடர்ந்து உறுதிப்பாட்டுடன் உள்ளோம்."

நவம்பர் 2025-ல் "இந்தியாவின் புதிய பெரிய மின்சார வாகனம்" என்று அறிமுகப்படுத்தப்பட்ட மஹிந்திரா XEV 9S, 7 இருக்கை நடைமுறைத்தன்மையுடன் மேம்பட்ட பாதுகாப்பு அம்சங்களையும் இணைக்கிறது. இதில் ஏழு ஏர்பேக்குகள், ஐந்து ரேடார்கள் மற்றும் ஒரு விஷன் கேமராவுடன் கூடிய நிலை 2+ மேம்பட்ட ஓட்டுநர் உதவி அமைப்புகள் (ADAS), DOMS (Eyedentity) தொழில்நுட்பத்துடன் ஓட்டுநர் தூக்கக் கலக்கம் கண்டறிதல், மற்றும் நேரடி பார்வை, பதிவு மற்றும் நேரடி தொடர்பு அம்சங்களுடன் கூடிய Secure360 Pro ஆகியவை அடங்கும். பயணிகளின் பாதுகாப்பு மற்றும் அன்றாட பன்முகத்தன்மை ஆகியவற்றிற்கான இந்த முக்கியத்துவம், இதை "இந்தியாவின் அதிகம் விற்பனையாகும் மின்சார வாகனமாக* மாற்ற உதவியுள்ளது.

*ஏப்ரல்-செப்டம்பர்'26 (நிதியாண்டு 2027 இன் முதலாம் அரையாண்டு) இல் EV 4W PV விற்பனை அளவுகளின் அடிப்படையில் (மொத்த விற்பனை அளவு).



இ-சேவை மையம்
ஸ்டார் ரெயின்போ சர்வீசஸ்
PASSPORT | MSME | PAN | AADHAAR
FSSAI | PATTA | LEGALHEIR
2,4 WHEELER INSURANCE
PROPERTY TAX, EB - NAME TRANSFER
STATE AND CENTRAL GOVT
AUTHORISED FRANCHISEE
ALL ONLINE SERVICES
8148231942 / 8144337349
11, South Perumal Koil Street, Vadapalani, Chennai - 600 026.

ஆண்டிறுதி விடுமுறை நாட்களுக்கான சலுகைகளை வழங்க MakeMyTrip உடன் 30,000 உள்நாட்டு மற்றும் 3,500 சர்வதேச ஹோட்டல்கள் மற்றும் ஹோம்ஸ்டேக்கள், 35 விமான நிறுவனங்கள் மற்றும் 8 வங்கிகள் இணைந்துள்ளன

சென்னை – 24 நவம்பர், 2026

ஆண்டிறுதி விடுமுறைப் பயணங்களைத் திட்டமிடும் பயணிகளுக்காக 'Travel Ka Muhurat Sale'-இன் இரண்டாவது பதிப்பு நவம்பர் 14, 2026 முதல் தொடங்குவதாக MakeMyTrip இன்று அறிவித்துள்ளது. பங்கேற்கும் கூட்டாளர்களில் ஹோட்டல் சங்கிலிகள், ரிசார்ட்டுகள், தனிப்பட்ட ஹோட்டல்கள், ஹோம்ஸ்டேக்கள் மற்றும் வில்லாக்கள் உள்ளிட்ட 30,000-க்கும் மேற்பட்ட உள்நாட்டு மற்றும் 3,500-க்கும் மேற்பட்ட சர்வதேச தங்குமிடங்கள், 35 உள்நாட்டு மற்றும் சர்வதேச விமான நிறுவனங்கள் மற்றும் 8 வங்கிகள் (நவம்பர் 11, 2026 நிலவரப்படி) அடங்கும்.

டிசம்பர் மாதத்தில் அதிகரிக்கும் கட்டணங்கள் மற்றும் குறைந்த அளவிலான இடவசதி குறித்துப் பயணிகள் கவலைப்படுவதால், ஆண்டிறுதிப் பயணங்கள் பெரும்பாலும் விலை குறித்த பதற்றத்துடனேயே அமைகின்றன. விமானங்கள், ஹோட்டல்கள், ஹோம்ஸ்டேக்கள், ஹாலிடே பேக்கேஜ்கள், பேருந்துகள், கேப்கள், ரயில்கள், டூர்ஸ் மற்றும் அட்ராக்ஷன்ஸ், ஃபாரெக்ஸ் மற்றும் விசா சேவைகள் ஆகியவற்றில் சலுகைகளுடன், முன்கூட்டியே திட்டமிட்டு நம்பிக்கையுடன் முன்பதிவு செய்வதற்கான பிரத்யேக முன்பதிவு காலத்தை 'Travel Ka Muhurat Sale' அவர்களுக்கு வழங்குகிறது.

கூர்க், அந்தமான், லட்சத்தீவு, ஜம்மு & காஷ்மீர், கேரளா, ராஜஸ்தான், வடகிழக்கு மாநிலங்கள் மற்றும் கோவா போன்ற விருப்பமான உள்நாட்டு இடங்கள் முதல் ஜப்பான், துபாய், மலேசியா, சிங்கப்பூர், தாய்லாந்து, வியட்நாம், இலங்கை, இங்கிலாந்து (UK) மற்றும் இதர ஐரோப்பிய நாடுகள் உள்ளிட்ட சர்வதேச இடங்கள் வரையிலான குறுகிய மற்றும் நீண்ட தூரப் பயணங்களை இந்தச் சலுகைகள் உள்ளடக்கியுள்ளன. ஃபெராரி வேர்ல்ட் (ஐக்கிய அரபு அமீரகம்), யுனிவர்சல் ஸ்டுடியோஸ் (சிங்கப்பூர்), மேடம் துசாட்ஸ் (சிங்கப்பூர்), மண்டாய் வைல்ட்லைஃப் குரூப் – நைட் சஃபாரி மற்றும் சிங்கப்பூர் உயிரியல் பூங்கா (சிங்கப்பூர்), மற்றும் சன் வேர்ல்ட் பா நா ஹில்ஸ் (வியட்நாம்) போன்ற உலகெங்கிலும் உள்ள பிரபலமான சுற்றுலாத் தலங்களும் இந்தப் பிரச்சாரத்திற்காக இணைந்துள்ளன.

MakeMyTrip-இன் கார்ப்பரேட், விமானங்கள், GCC மற்றும் மார்க்கெட்டிங் பிரிவுகளின் தலைமை இயக்க அதிகாரி ராஜ் ரிஷி சிங் அவர்கள், "இந்தியாவில் உள்ள வாடிக்கையாளர்கள் பண்டிகைக் கால விற்பனைகளை ஆவலுடன் எதிர்பார்க்கிறார்கள்; பயணத்திற்கும் அதற்கென ஒரு திட்டமிடல் காலம் அவசியம் என்று நாங்கள் நம்புகிறோம். இந்த இரண்டாவது பதிப்பின் மூலம், வழக்கமான விற்பனையைத் தாண்டி, இந்தியப் பயணிகளுக்கு விடுமுறைப் பயணத்தைப் பற்றி யோசிப்பதிலிருந்து அதை முன்பதிவு செய்யும் நிலைக்குச் செல்வதற்கான நம்பிக்கையை அளிப்பதே எங்கள் நோக்கமாகும். பயணிகள் தங்கள் ஆண்டிறுதி விடுமுறையைப் பலவிதமான சேமிப்புகளுடன் திட்டமிடக்கூடிய ஒரு நிலையான தேதியாக 'Travel Ka Muhurat Sale' காலண்டரில் இடம்பெற வேண்டும் என்றும், எங்கள் கூட்டாளர்கள் உச்சக்கட்ட பருவத்திற்கான தேவையை முன்கூட்டியே அறிந்து அதற்குத் தயாராக வேண்டும் என்றும் நாங்கள் விரும்புகிறோம்" என்று கூறினார்.

இந்த விற்பனையை அறிவிக்கும் விதமாக, பிராண்ட் தூதர்கள் ஆலியா பட் மற்றும் ரன்வீர் சிங் நடித்துள்ள ஆறு விளம்பரப் படங்கள் கொண்ட புதிய பிரச்சாரத்தை MakeMyTrip வெளியிட்டுள்ளது. உள்நாட்டு மற்றும் சர்வதேச விமானங்கள், உள்நாட்டு மற்றும் சர்வதேச ஹோட்டல்கள், வில்லாக்கள் மற்றும் அபார்ட்மென்ட்கள், ஹாலிடே பேக்கேஜ்கள் மற்றும் வெளியூர் கேப்கள் ஆகியவற்றை உள்ளடக்கிய இந்த விற்பனையின் பல்வேறு அம்சங்களை இந்தப் பிரச்சாரம் எடுத்துக்காட்டுகிறது. இது Talented என்ற கிரியேட்டிவ் ஏஜென்சியால் உருவாக்கப்பட்டுள்ளது.

MakeMyTrip-இன் லாயல்டி திட்டமான MMTBLACK உறுப்பினர்களுக்கு நவம்பர் 13 அன்று இந்த விற்பனைக்கான முன்கூட்டிய அணுகல் கிடைக்கும். ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும், MMTBLACK உறுப்பினர்களுக்கு மட்டுமேயான பிரத்யேக பிளாக் ஃப்ரைடே சலுகைகளையும் இந்தப் பிரச்சாரம் வழங்குகிறது; மேலும் தினசரி லைட்னிங் டிராப்ஸ் மூலம் அனைத்துப் பயனர்களுக்கும் மாலை 6 மணி முதல் இரவு 9 மணி வரை குறிப்பிட்ட எண்ணிக்கையிலான சலுகைகள் வெளியிடப்படுகின்றன.

MakeMyTrip இந்த ஆண்டின் தொடக்கத்தில் அறிமுகப்படுத்திய ஹோட்டல்கள் மற்றும் ஹோம்ஸ்டேக்களுக்கான உலகளாவிய ரிவார்ட்ஸ் திட்டமான OneCircle, இந்த விற்பனையின் போது உறுப்பினர்களின் முன்பதிவுகளுக்குக் கூடுதல் மதிப்பை வழங்குகிறது.

சுற்றுச்சூழல் பாதுகாப்பையும் சமூக பொறுப்புணர்வையும் வலியுறுத்தும் 'கூடு' தமிழ் திரைப்படம்: சர்வதேச திரைப்பட விழாவில் செய்தியாளர் சந்திப்பு

சென்னை – 24 நவம்பர், 2026

சுற்றுச்சூழல் பாதுகாப்பையும் சமூக பொறுப்புணர்வையும் வலியுறுத்தும் 'கூடு' தமிழ் திரைப்படம்: சர்வதேச திரைப்பட விழாவில் செய்தியாளர் சந்திப்பு.

இந்தியாவின் 57-வது சர்வதேச திரைப்பட விழா கோவாவில் நடைபெற்று வருகிறது. இதன் ஒரு பகுதியாக, 'கூடு' என்ற தமிழ்த் திரைப்படம் குறித்த செய்தியாளர் சந்திப்பு நடைபெற்றது. இதில் படத்தின் இயக்குநர் ஜோயல் விஜய், தயாரிப்பாளர்கள் ராஜேஷ் மேனன், கணேஷ் எம், நடிகர் வி. ஜெயப்பிரகாஷ் ஆகியோர் பங்கேற்று படத்தின் கதையையும் அதன் சுற்றுச்சூழல் கருத்தையும் பகிர்ந்து கொண்டனர்.

தமிழ்நாட்டின் வாசாத்தியைப் பின்னணியாகக் கொண்டு இப்படம் உருவாக்கப்பட்டுள்ளது. மின்தடை ஏற்பட்டபோது, கிராமத்தில் உள்ள மின்மாற்றிக்குள் முட்டைகளுடன் சிட்டுக்குருவியின் கூடு இருப்பது தெரியவருகிறது. இதையடுத்து, கிராமத் தலைவர் அகத்தியன் வழிகாட்டுதலின்படி, வேளாண்மைப் பட்டதாரியான கதிர் தலைமையில் கிராம மக்கள் அந்தப் பறவைகளைக் காப்பாற்ற 35 நாட்கள் மின்சாரம் இல்லாமல் வாழ முடிவு செய்கின்றனர். இதற்கு கடும் எதிர்ப்புகள் எழுந்தாலும், கூட்டைப் பாதுகாக்கப் பல தியாகங்களைச் செய்கின்றனர்.

இயக்குநர் ஜோயல் விஜய் பேசுகையில், இந்தப் பூமி மனிதர்களுக்கு மட்டுமே சொந்தமானது அல்ல எனவும் எண்ணற்ற உயிரினங்களுக்கும் சொந்தமானது என்பதை உணர்த்துவதே படத்தின் நோக்கம் என்றும் தெரிவித்தார். பிற உயிரினங்களுடன் இணைந்து வாழ்வதும், அவற்றைப் பாதுகாப்பதும் மனிதர்களின் பொறுப்பு என்றும் அவர் குறிப்பிட்டார்.

நடிகர் வி. ஜெயப்பிரகாஷ் பேசுகையில், உண்மைச் சம்பவத்தை அடிப்படையாகக் கொண்ட கதை என்பதால் உடனடியாக இப்படத்தில் நடிக்க ஒப்புக்கொண்டதாகக் கூறினார்.

தயாரிப்பாளர் ராஜேஷ் மேனன் பேசுகையில், உணர்வுபூர்வமான கதையையும் எளிமையான வசனங்கள் மூலம் சுற்றுச்சூழல் கருத்தையும் இப்படம் எடுத்துரைப்பதாகக் குறிப்பிட்டார். 35 நாட்கள் மின்சாரம் இல்லாமல் வாழ்வதில் ஏற்படும் நடைமுறைச் சிக்கல்களையும் சுவாரசியமாகப் படத்தில் எடுத்துரைத்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

இந்தச் செய்தியாளர் சந்திப்பை பிரவீன் குமார் எஸ். ஒருங்கிணைத்தார்.

வீட்டுக் கடன் மற்றும் மைக்ரோ கடன்களில் ₹12,000 கோடி மைல்கல்லைக் கடந்தது உஜ்ஜீவன் ஸ்மால் ஃபைனான்ஸ்!

சென்னை – 24 நவம்பர், 2026

உஜ்ஜீவன் ஸ்மால் ஃபைனான்ஸ் வங்கி ("வங்கி") தனது வீட்டுக் கடன் மற்றும் மைக்ரோ கடன் (Housing and Micro Mortgages) பிரிவில் ₹12,000 கோடி என்ற மைல்கல்லை எட்டியுள்ளது. கிராமப்புற சந்தைகளில் தனது இருப்பை மேலும் ஆழப்படுத்துவதற்கும், முறையான வீட்டுவசதி நிதி உதவி குறைவாக உள்ள குடும்பங்களுக்குச் சேவை செய்வதற்கும் வங்கி கூடுதல் வாய்ப்புகளை எதிர்நோக்கியுள்ளது.

இந்தச் சாதனையைக் கொண்டாடும் விதமாக, 'பில்டிங் பாரத் – பிரிக் பை பிரிக்' (Building Bharat – Brick by Brick) என்ற தொழில் துறை மாநாட்டை வங்கி நடத்தியது. இதில், இந்தியாவில் மலிவு விலை வீட்டுவசதி நிதியின் எதிர்காலம் குறித்து விவாதிக்கப்பட்டது. கடந்த பத்தாண்டுகளில் இந்தியாவில் மலிவு விலை வீடுகளுக்கான தேவை வேகமாக அதிகரித்து வரும் நிலையில், வீட்டுவசதி இடைவெளியைக் குறைப்பதில் நிதி நிறுவனங்கள் மற்றும் தொழில் துறை கூட்டாண்மைகளின் பங்கை இந்த மாநாடு எடுத்துரைத்தது.

தேசிய வீட்டுவசதி வங்கியின் (NHB) நிர்வாக இயக்குநர் சஞ்சய் சுக்லா சிறப்புரையாற்றினார்; அதனைத் தொடர்ந்து குழு விவாதம் நடைபெற்றது. இக்குழுவில் உஜ்ஜீவன் எஸ்.எஃப்.பி (SFB) பகுதிநேரத் தலைவர் மற்றும் சுயாதீன இயக்குநர் பி.ஏ. பிரபாகர், உஜ்ஜீவன் எஸ்.எஃப்.பி இடைக்கால தலைமை நிர்வாக அதிகாரி மற்றும் முழுநேர செயல் இயக்குநர் கரோல் ஃபுர்டாடோ, இக்ரா (ICRA) குழுமத் தலைவர் மற்றும் மூத்த துணைத் தலைவர் ஆஷிஷ் மோதானி, டீல் இந்தியா (Teal India) இணை நிறுவனர் மற்றும் தலைமை செயல்பாட்டு அதிகாரி ரோஹன் ஸ்ரீதர், க்ரிஹா (GRIHA) கவுன்சில் துணைப் பொது மேலாளர் மற்றும் பொருளாளர் ஆகாஷ் தீப், தேசிய வீட்டுவசதி வங்கியின் பொது மேலாளர் விஷால் கோயல் மற்றும் உஜ்ஜீவன் எஸ்.எஃப்.பி சுயாதீன இயக்குநர் மோனா கச்வாஹா (நெறியாளர்) ஆகியோர் பங்கேற்றனர்.

வீட்டுவசதி நிதி அணுகலை விரிவுபடுத்துதல், கிராமப்புற விரிவாக்கம், முதல் முறையாக வீடு வாங்குபவர்களை ஊக்குவித்தல், தொழில்நுட்பம் சார்ந்த தீர்வுகள், கொள்கை ஆதரவு மற்றும் நிலையான கட்டுமானம் ஆகியவற்றை மையமாகக் கொண்டு, இந்தியாவின் மலிவு விலை வீட்டுவசதித் துறையில் உருவாகி வரும் வாய்ப்புகள் மற்றும் சவால்கள் குறித்து இவ்விவாதத்தில் பேசப்பட்டது.

மாநாட்டின் முக்கியக் கருத்துகள் பின்வருமாறு:

சஞ்சய் சுக்லா, நிர்வாக இயக்குநர், தேசிய வீட்டுவசதி வங்கி (NHB): தனது சிறப்புரையில், வீட்டுவசதி நிதியில் ஸ்மால் ஃபைனான்ஸ் வங்கிகளின் (SFB) வளர்ந்து வரும் பங்களிப்பை அவர் எடுத்துரைத்தார். வீட்டுக் கடன்களின் மதிப்பில் எஸ்.எஃப்.பி-க்கள் 1.3% பங்கைக் கொண்டிருந்தாலும், கணக்குகளின் எண்ணிக்கையில் 5.6% பங்கைக் கொண்டுள்ளன என்பதை அவர் சுட்டிக்காட்டினார். நிதி அணுகலை விரிவுபடுத்துவதில் நீண்டகால நிதியுதவி (patient funding), ஆதரவான கொள்கைகள் மற்றும் டிஜிட்டல் தீர்வுகளின் முக்கியத்துவத்தை அவர் வலியுறுத்தினார்.

பி.ஏ. பிரபாகர், பகுதிநேரத் தலைவர் மற்றும் சுயாதீன இயக்குநர், உஜ்ஜீவன் எஸ்.எஃப்.பி: முறைசாரா துறை வாடிக்கையாளர்களிடையே சொந்த வீடு வாங்கும் தேவை அதிகரித்து வருவதையும், அவர்களின் வருமான முறைகள் மற்றும் கடனைத் திருப்பிச் செலுத்தும் திறனைப் புரிந்துகொள்வதன் முக்கியத்துவத்தையும் அவர் எடுத்துரைத்தார்.

கரோல் ஃபுர்டாடோ, இடைக்கால தலைமை நிர்வாக அதிகாரி மற்றும் முழுநேர செயல் இயக்குநர், உஜ்ஜீவன் எஸ்.எஃப்.பி: உஜ்ஜீவன் ₹12,000 கோடி மைல்கல்லைக் கடந்திருப்பது, வங்கியின் மீது வாடிக்கையாளர்கள் வைத்துள்ள நம்பிக்கையையும், வீட்டுவசதி நிதி அணுகலை விரிவுபடுத்துவதில் வங்கியின் அர்ப்பணிப்பையும் பிரதிபலிக்கிறது என்று அவர் கூறினார். மேலும், முறைசாரா பொருளாதாரத்தைச் சேர்ந்த வாடிக்கையாளர்களைப் புரிந்துகொள்வது அவர்களின் குறிப்பிட்ட தேவைகளைப் பூர்த்தி செய்ய உதவுகிறது என்றும், கிராமப்புற வீட்டுவசதி, முதல் முறையாக வீடு வாங்குபவர்கள் மற்றும் பல்வேறு வாடிக்கையாளர் பிரிவுகளில் சேவைகளை விரிவுபடுத்துவதில் குறிப்பிடத்தக்க வளர்ச்சி வாய்ப்புகள் உள்ளன என்றும் அவர் வலியுறுத்தினார்.

ஆஷிஷ் மோதானி, குழுமத் தலைவர் மற்றும் மூத்த துணைத் தலைவர், இக்ரா (ICRA): வரலாற்று ரீதியாகக் குறைந்த கடன் இழப்புகள் மற்றும் நிலையான இரட்டை இலக்க வளர்ச்சிக்கான சாத்தியக்கூறுகளைக் கொண்ட ஒரு வலுவான பாதுகாப்பான கடன் (secured-lending) பிரிவாக 'வீட்டுவசதி' உள்ளது என்பதை அவர் அடிக்கோடிட்டுக் காட்டினார்.

ரோஹன் ஸ்ரீதர், இணை நிறுவனர் மற்றும் தலைமை செயல்பாட்டு அதிகாரி, டீல் இந்தியா (Teal India): குறிப்பாகச் சிறிய நகரங்களில் மோசடிகளைக் குறைப்பதிலும், உரிய ஆய்வினை (due diligence) மேம்படுத்துவதிலும், கடன் செயல்முறைகளை விரைவுபடுத்துவதிலும் டிஜிட்டல் சொத்து-உரிமைச் சரிபார்ப்பின் (digital property-title verification) பங்கை அவர் வலியுறுத்தினார்.

ஆகாஷ் தீப், துணைப் பொது மேலாளர் மற்றும் பொருளாளர், க்ரிஹா (GRIHA) கவுன்சில்: 'ஜன் க்ரிஹா' (Jan Griha) சான்றிதழ் போன்ற முயற்சிகளின் ஆதரவுடன், ஆற்றல், பகல் வெளிச்சம் மற்றும் நீர் சிக்கனம் ஆகியவற்றை உள்ளடக்கிய எளிய நடவடிக்கைகளின் மூலம் மலிவு விலை வீடுகளை மேலும் நிலையானதாக (sustainable) மாற்றுவது குறித்து அவர் விவாதித்தார்.

விஷால் கோயல், பொது மேலாளர், தேசிய வீட்டுவசதி வங்கி: இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் (GDP) அடமானக் கடன்களின் விகிதம் சுமார் 12% ஆக உள்ளது என்றும், அடுத்த ஐந்து ஆண்டுகளில் இது 18–20% ஆக உயர வாய்ப்புள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார். கிராமப்புற வீட்டுவசதி, பெண் கடன் வாங்குபவர்கள் மற்றும் பின்தங்கிய பகுதிகளுக்கான மறுநிதியளிப்பு (refinance) வாய்ப்புகள் மற்றும் சலுகை நிதியுதவியை அவர் வலியுறுத்தினார்.

மோனா கச்வாஹா, சுயாதீன இயக்குநர், உஜ்ஜீவன் எஸ்.எஃப்.பி: வீட்டுவசதி இடைவெளியைக் குறைப்பதற்கும், குறிப்பாகக் கிராமப்புற மற்றும் பின்தங்கிய சந்தைகளில் உள்ள அதிகமான குடும்பங்கள் தங்களது சொந்த வீட்டுக் கனவை நனவாக்குவதற்கும், மேம்பட்ட நிதி அணுகல், ஆதரவான கொள்கைகள் மற்றும் புதுமையான தீர்வுகள் மிகவும் அவசியம் என்பதை அவர் சுட்டிக்காட்டினார்.

உஜ்ஜீவன் ஸ்மால் ஃபைனான்ஸ் வங்கியின் வீட்டுக் கடன் மற்றும் நுண் அடமானக் கடன் பிரிவின் வணிகத் தலைவர் பிரதீப் பி கூறுகையில்: "ஒரு வீடு என்பது ஒரு குடும்பத்தின் முதல் உண்மையான சொத்து. இந்த ₹12,000 கோடியின் ஒவ்வொரு ரூபாயும், இப்போது தனக்கென ஒரு சொந்தக் கூரையைக் கொண்டுள்ள ஒரு குடும்பத்தைக் குறிக்கிறது. இந்த மைல்கல் எங்கள் வாடிக்கையாளர்களுக்கும் எங்கள் குழுவினருக்கும் உரியது; மேலும் இப்பயணம் தொடர்ந்து நடைபெறும்" என்றார்.

உஜ்ஜீவனின் வீட்டுவசதி வணிகம், ஸ்மால் ஃபைனான்ஸ் வங்கி நிறுவப்படுவதற்கு முன்பே 2015-ஆம் ஆண்டில் ஒரு முன்னோட்டத் திட்டமாகத் தொடங்கி, பின்னர் அசாம் மற்றும் திரிபுரா உட்பட 23 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் விரிவடைந்துள்ளது. தேசிய வீட்டுவசதி வங்கியுடன் (NHB) இணைக்கப்பட்ட நிதியுதவியைப் பெற்ற முதல் ஸ்மால் ஃபைனான்ஸ் வங்கி இதுவாகும்; இதுவரை ₹1,540 கோடி மறுநிதியுதவியைப் (refinance) பெற்றுள்ளது. மேலும், பிரதான் மந்திரி ஆவாஸ் யோஜனா-கிராமின் (PMAY-G) 1.0 திட்டத்தின் கீழ் 12,000-க்கும் மேற்பட்ட குடும்பங்களுக்கு இது ஆதரவளித்துள்ளது; இதன் சராசரி வீட்டுக் கடன் அளவு ₹12–13 லட்சமாக உள்ளது.

மனித மனசாட்சியும், நிபந்தனையற்ற அன்பும்: 57-வது இந்திய சர்வதேச திரைப்பட விழாவில் கவனம் ஈர்த்த இரு திரைப்படங்கள்

சென்னை – 24 நவம்பர், 2026

மனித மனசாட்சியும், நிபந்தனையற்ற அன்பும்: 57-வது இந்திய சர்வதேச திரைப்பட விழாவில் கவனம் ஈர்த்த இரு திரைப்படங்கள்.

கோவாவில் நடைபெறும் 57-வது இந்திய சர்வதேச திரைப்பட விழாவில் (IFFI), இந்தியன் பனோரமா பிரிவில் இடம்பெற்றுள்ள வங்காள மொழித் திரைப்படமான 'பக்லா கோரா' (Pagla Ghora), இந்தித் திரைப்படமான 'ஓ மை டாக்' (Ohh My Dog) ஆகியவை கவனம் பெற்றுள்ளன.

இத்திரைப்படங்கள் குறித்து நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் இயக்குநர்கள் சேகர் தாஸ், அமித் ராய், நடிகை கார்கி ராய் சௌத்ரி, தயாரிப்பாளர் டாக்டர் பிரபிர் பௌமிக் ஆகியோர் பங்கேற்றனர்.

பக்லா கோரா: தேசிய திரைப்பட விருது பெற்ற இயக்குநர் சேகர் தாஸ் இயக்கியுள்ள இப்படம், மறைந்த நாடக ஆசிரியர் பாதல் சர்க்காரின் புகழ்பெற்ற நாடகத்தைத் தழுவி உருவாக்கப்பட்டுள்ளது. தற்கொலை செய்துகொண்ட பெண்ணின் இறுதிச்சடங்கிற்காக இரவில் காட்டுப் பகுதியில் உள்ள மயானத்தில் கூடும் நான்கு ஆண்களைப் பற்றிய கதை இது. அந்தப் பெண்ணின் ஆவி அவர்களை எதிர்கொள்ளும்போது, அவர்களின் தவறுகள், குற்ற உணர்வுகள் வெளிப்படுகின்றன என்று இயக்குநர் சேகர் தாஸ் கூறினார்.

ஓ மை டாக்: இயக்குநர் அமித் ராய் இயக்கியுள்ள இப்படம், மனிதர்களுக்கும் விலங்குகளுக்கும் இடையிலான ஆழமான அன்பைப் பேசுகிறது. அசாமில் 14 வயது அபு தனது காணாமல் போன நாய் மோமோவைத் தேடுகிறான். பீகாரில் ஆஸ்கர் என்ற நாய், தனது 15 வயது உரிமையாளர் பிரின்ஸைத் தேடுகிறது. விலங்குகளின் விசுவாசம் குறித்து இந்தப் படம் பேசுகிறது என்று இயக்குநர் அமித் ராய் குறிப்பிட்டார்.

நடிகை கார்கி ராய் சௌத்ரி, தமது கதாபாத்திரத்தின் உணர்வுகள் குறித்துப் பேசினார். தயாரிப்பாளர் டாக்டர் பிரபிர் பௌமிக், இலக்கியப் படைப்புகளைத் திரைப்படமாக்குவதன் முக்கியத்துவத்தை எடுத்துரைத்தார்.

நிலக்கரி, பழுப்பு நிலக்கரி சுரங்கங்களுக்கான புதிய வழிகாட்டு நெறிமுறைகள் வெளியீடு

சென்னை – 24 நவம்பர், 2026

நிலக்கரி, பழுப்பு நிலக்கரி சுரங்கங்களுக்கான திட்டங்களைத் தயாரித்தல், சுரங்கங்களை மூடுவதற்கான திட்டம் உருவாக்குதல் ஆகியவை தொடர்பான புதிய வழிகாட்டு நெறிமுறைகளை மத்திய நிலக்கரித் துறை அமைச்சகம் வெளியிட்டுள்ளது. இந்த நெறிமுறைகள் 2026 நவம்பர் 20 அன்று வெளியிடப்பட்டன. வெளியிடப்பட்ட நாளிலிருந்து 30 நாட்களுக்குப் பிறகு இது நடைமுறைக்கு வரும்.

சுரங்கத் திட்டமிடல், சுரங்கங்களை மூடுதல் ஆகியவற்றை அறிவியல் அடிப்படையில் முறையாக மேற்கொள்வதற்கான வழிமுறைகள் இதில் இடம்பெற்றுள்ளன. ஏற்கெனவே நடைமுறையில் உள்ள சட்ட விதிமுறைகளுடன் இணைந்து செயல்படும் வகையில் இவை உருவாக்கப்பட்டுள்ளன.

திட்டங்களை ஆய்வு செய்தல், ஒப்புதல் வழங்குதல் ஆகிய ஒவ்வொரு நிலையிலும் குறிப்பிட்ட காலக்கெடு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

நிலத்தடியில் நிலக்கரியை வாயுவாக மாற்றும் தொழில்நுட்பமும் சுரங்க முறையாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இதற்கான 2026-ம் ஆண்டு வழிகாட்டு நெறிமுறைகளும் புதிய விதிமுறைகளில் இணைக்கப்பட்டுள்ளன.

இதன் மூலம் சுரங்கப் பணிகளை விரைவாகத் தொடங்குவதுடன், தொழில் செய்வதை எளிதாக்கவும், நாட்டின் எரிசக்திப் பாதுகாப்பை வலுப்படுத்தவும் முடியும் என நிலக்கரி அமைச்சகம் தெரிவித்துள்ளது. சுரங்கங்களை அறிவியல் முறையில் மூடி, அந்தப் பகுதிகளை உள்ளூர் மக்களின் நலனுக்காகப் பயன்படுத்துவதற்கும் இந்த நெறிமுறைகள் உதவும்.

MM கிளினிக்
அரசு மூத்த மருத்துவ அதிகாரி
காலை 10 மணி முதல் மதியம் 2 மணி வரை - முதல் முறை இந்த நோட்டீசை கொண்டுவருபவர்களுக்கு சிகிச்சை இலவசம்
8668018731
அழகிரி நகர் மெயின் ரோடு, வடபழனி, சென்னை - 26.

குருநானக் தேவின் பிரகாஷ் பர்வ் தினத்தை முன்னிட்டு, குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு நாட்டு மக்களுக்கு வாழ்த்து

சென்னை – 24 நவம்பர், 2026

குருநானக் தேவின் பிரகாஷ் பர்வ் தினத்தை முன்னிட்டு, குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு நாட்டு மக்களுக்கு வாழ்த்து.

சீக்கிய மதத்தின் முதல் குருவான குருநானக் தேவின் பிரகாஷ் பர்வ் தினத்தை (பிறந்த தினம்) முன்னிட்டு, குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு நாட்டு மக்களுக்கு வாழ்த்துகளைத் தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தி:

" குருநானக் தேவின் பிரகாஷ் பர்வ் தினத்தை (பிறந்த தினம்) முன்னிட்டு இந்தியாவிலும் வெளிநாடுகளிலும் வாழும் அனைத்து இந்தியர்களுக்கும் வாழ்த்துகள்.

குருநானக் தேவ் வழங்கிய ' இக் ஓங்கார் ' என்ற போதனை, ஒட்டுமொத்த மனிதகுலத்தின் ஒற்றுமையை வலியுறுத்துகிறது. சாதி வேறுபாடுகள், சமூக ஏற்றத்தாழ்வுகள், பாகுபாடுகள் இல்லாத சமுதாயத்தை உருவாக்க வேண்டும் என்று அவர் வலியுறுத்தினார். அன்பு, இரக்கம், மனிதநேயத் தொண்டு ஆகியவை நமது வாழ்க்கையின் அடிப்படையாக இருக்க வேண்டும் என்றும் போதித்தார்.

' நாம் ஜபோ, கிரத் கரோ, வந்த் சகோ ' என்ற அவரது மூன்று முக்கியக் கொள்கைகள் தனிச்சிறப்பு வாய்ந்தவை. இறைவனை நினைத்தல், நேர்மையாகவும் கடினமாகவும் உழைத்துப் பொருளீட்டுதல், கிடைத்த வருமானத்தைப் பிறருடன் பகிர்ந்துகொள்ளுதல் என்பதே அவற்றின் பொருள். லங்கர் எனப்படும் அனைவருக்கும் இலவச உணவு வழங்கும் மரபு மூலம் சமூக சமத்துவம், சகோதரத்துவம், தன்னலமற்ற சேவை ஆகியவற்றை அவர் நடைமுறையில் எடுத்துக்காட்டினார்.

இந்தப் புனித நாளில், குருநானக் தேவின் போதனைகளைப் பின்பற்றி, சேவை, சமத்துவம், நல்லிணக்கம் ஆகியவற்றைக் கடைப்பிடித்து, சமுதாயம், நாட்டின் நலனுக்குப் பங்களிக்க அனைவரும் உறுதியேற்க வேண்டும்."

அசாமி திரைப்படம் வலிமையான மறுமலர்ச்சியை காண்கிறது: தயாரிப்பாளர் அந்தரா ஜிஜி சௌத்ரி

சென்னை – 24 நவம்பர், 2026

பிராந்திய திரைப்படத் தயாரிப்பாளர்கள் பார்வையாளர்களை ஈர்க்கக்கூடிய கதைகளை அதிகளவில் காட்சிப்படுத்துவதால், அசாமி திரைப்படம் ஒரு வலிமையான மறுமலர்ச்சியைக் கண்டுவருவதாக திரைப்படத் தயாரிப்பாளர் அந்தரா ஜி.ஜி. சௌத்ரி கூறியுள்ளார்.

கோவாவில் நடைபெற்றுவரும் 57- வது இந்திய சர்வதேச திரைப்பட விழாவின் ஒரு பகுதியாக, தனது அசாமி திரைப்படமான ' சூர்யமுகி ' குறித்து பத்திரிகை தகவல் அலுவலகத்தின் ஊடகவியலாளர்கள் சந்திப்பின்போது தெரிவித்தார்.

இந்தத் திரைப்படம், உத்பால் என்ற சிறுவனின் வாழ்க்கையை 40 வருட இடைவெளிக்குப் பிறகு மீண்டும் திரும்பிப்பார்க்க வைக்கிறது. மனிதனின் தேர்வுகள் எவ்வாறு வாழ்க்கையை வடிவமைத்து, நீடித்த விளைவுகளை ஏற்படுத்துகின்றன என்பதை இது ஆராய்கிறது. ' சூர்யமுகி ' திரைப்படம் நவம்பர் 22 அன்று கோவாவில் நடைபெறும் திரைப்பட விழாவில் உலகளவில் முதன்முறையாக திரையிடப்பட்டது.

இந்தத் திரைப்படம் குறித்துப் பேசிய இயக்குநர், கதையின் எளிமையும், ' சூர்யமுகி '- ன் கவரக்கக்கூடிய முக்கியக் கதாபாத்திரமும் தன்னை ஈர்த்ததாக குறிப்பிட்டார். திரைப்படத்தின் உலகளாவிய வரவேற்பை எடுத்துரைத்த சௌத்ரி, அதன் முக்கிய அம்சங்கள் பல்வேறு பின்னணிகளைக் கொண்ட பார்வையாளர்களிடம் எதிரொலிக்கும் என்று நம்பிக்கை தெரிவித்தார். அசாமி திரைப்படத்தின் மாறிவரும் சூழல் குறித்தும் அவர் குறிப்பிட்டார்.

மொத்த உள்நாட்டு உற்பத்தி, நுகர்வோர் விலைக் குறியீடு, தொழில்துறை உற்பத்திக் குறியீடு ஆகியவற்றின் புதிய வரிசை குறித்த தரவு பயனர்கள் மாநாடு மும்பையில் நடைபெற்றது

சென்னை – 24 நவம்பர், 2026

மொத்த உள்நாட்டு உற்பத்தி, நுகர்வோர் விலைக் குறியீடு, தொழில்துறை உற்பத்திக் குறியீடு ஆகியவற்றின் புதிய வரிசை குறித்த தரவு பயனர்கள் மாநாடு மும்பையில் நடைபெற்றது.

மத்திய புள்ளியியல் மற்றும் திட்ட அமலாக்க அமைச்சகம், ரிசர்வ் வங்கியுடன் இணைந்து மொத்த உள்நாட்டு உற்பத்தி, நுகர்வோர் விலைக் குறியீடு, தொழில்துறை உற்பத்திக் குறியீடு ஆகியவற்றின் புதிய வரிசை குறித்த தரவுப் பயனர்கள் மாநாட்டை மும்பையில் இன்று (2026 நவம்பர் 23) நடத்தியது. திருத்தப்பட்ட குறியீடுகளின் மாற்றங்கள், தரவு ஆதாரங்கள் குறித்து பயனர்களுக்கு விளக்கும் வகையில் இம்மாநாடு நடைபெற்றது.

மத்திய புள்ளியியல் துறை தலைமை இயக்குநர் டாக்டர் தலிப் சிங், மத்திய புள்ளியியல் மற்றும் திட்ட அமலாக்க அமைச்சகத்தின் செயலாளர் டாக்டர் சௌரப் கார்க், ரிசர்வ் வங்கி துணை ஆளுநர் டாக்டர் பூனம் குப்தா, எச்டிஎஃப்சி முன்னாள் தலைவர் தீபக் பரேக் ஆகியோர் தொடக்க அமர்வில் உரையாற்றினர். வளர்ச்சியடைந்த இந்தியா 2047 இலக்கை எட்ட ஆதாரப்பூர்வமான கொள்கை உருவாக்கம் அவசியம் என டாக்டர் சௌரப் கார்க் வலியுறுத்தினார்.

தொடர்ந்து நடைபெற்ற மூன்று தொழில்நுட்ப அமர்வுகளில், புதிய மொத்த உள்நாட்டு உற்பத்தி, நுகர்வோர் விலைக் குறியீடு, தொழில்துறை உற்பத்திக் குறியீடு ஆகியவற்றில் மேற்கொள்ளப்பட்டுள்ள அடிப்படை ஆண்டு மாற்றங்கள், மேம்பாடுகள் குறித்து அதிகாரிகள் விளக்கினர்.



